

# தமிழகத்தின் முதல் அம்மா நூலகம், தஞ்சையில் திறப்பு - மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் 20 லட்சம் ரூபாய் செலவில் கணினி உள்ளிட்ட பல்வேறு வசதிகள்

Feb 22 2016 6:01AM

**எழுத்தின் அளவு:** அ + அ - அ

SHARE

தமிழகத்தின் முதல் அம்மா நூலகம், தஞ்சை மாநகராட்சியில் 20 லட்சம் ரூபாய் செலவில் திறந்துவைக்கப்பட்டது. மாணவ, மாணவிகளுக்கென பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதாவின் பிறந்தநாளை முன்னிட்டு, மாணவ, மாணவிகளுக்கென 20 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள அம்மா நூலகத்தினை அமைச்சர் திரு. ஆர்.வைத்திலிங்கம் திறந்துவைத்தார். 9 கணினிகள், ஜெராக்ஸ் மெஷின், சிசிடிவி கேமரா, இலவச இணையதள வசதி ஆகியவை ஏற்படுத்தப்பட்டுள்ளன. 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவ-மாணவிகளுக்கான வழிகாட்டி தொகுப்புகள், மேற்படிப்புக்கான செய்தித்தாள்கள், மருத்துவ ஆய்வு இதழ்கள், உலகப் பொது அறிவு புத்தகங்கள், தகவல் திரட்டு களஞ்சியங்கள், தமிழ் மின் நூலகம் ஆகியவற்றை மாணவ, மாணவிகள் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவ, மாணவிகள் உயர்படிப்புகள் பற்றி அறிந்துகொள்ளவும், வேலைவாய்ப்பு போட்டித் தேர்வுக்கான புத்தகங்களும் உள்ளன.

http://jayanewslive.com/tamilnadu/tamilnadu_45940.html